முருகப்பெருமான் துணை

முருகப் பெருமான் தலைமையில் ஞானசித்தர்கள் ஆட்சி உலகில் வரவேண்டும் என்றால் உலக மக்கள் உயிர்கொலை தவிர்த்து புலால் மறுத்து சுத்தசைவ உணவினை மேற்கொள்ள வேண்டும் என்பது ஞானிகள் வாக்காகும்

**மகான் அதிபத்த நாயனார் அருளிய யோக பிரசன்ன ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

07.04.2021, புதன்கிழமை

1. தருமராசனே அரங்கா வாழ்க
   தவமாக அருளும் தேசிகனே வாழ்க
   பெருமை மிக்க ஞானயுகம் படைக்க
   பெருந்தயவாக வந்த குருராசா
2. அரசனே உன் பெருமை கூறி
   அறிவிப்பேன் சார்வரி சேல் திங்கள்
   இருபானை திகதி கணக்கன் வாரம்
   (சார்வரி வருடம் பங்குனி மாதம் 25ம் நாள், 07.04.2021 புதன்கிழமை)
   இயம்பிடுவேன் யோகபிரசன்ன ஆசி
3. ஆசியை ஞானியர்களை தொடர்ந்து
   அறுபத்து மூவருள் அதிபத்த நாயனாரும்
   ஆசிதனை அரங்கன் கேட்க உரைப்பேன்
   அகிலம் ஞான ஆட்சிக் காலம் அடைய
4. அடைய உயிர்க்கொலை நீக்கி
   ஆதிசிவன் சைவ நெறியை
   தடையின்றி உலக மக்கள்
   தவமாக ஏற்றுத் தொடரவேணும்
5. வேண்டியே சரவணச் சுடரேற்றி
   வேலவன் வழிபாடு செய்து
   தொண்டர்களாகி அரங்கன் வழி
   தொடர்ந்து உலகமக்கள் வர
6. வருகவே வையகம் எங்கிலும்
   வள்ளல் தன்மை பெருகியே
   தரும சிந்தை வளரவளர
   தரணியில் ஞானவான்கள் ஆட்சி
7. ஆட்சி அமைந்து கலியுகம்
   ஆற்றல் மிக்க ஞானயுகமாகும்
   மாட்சிமைபட ஞானிகள் பூசை
   மகத்துவம்பட உலகினில் நடக்க
8. நடக்கவே மக்களிடை தெளிவும்
   ஞான தேசிகன் கரங்கள்பட
   இடர்வெல்லும் மகாமந்திர தீட்சை
   ஏற்று உலகமக்கள் செபதபம் காண

9. காணவே மக்களுக்கு பேராற்றல்
கந்தவேலன் ஞான சக்தியாக பரவி
ஞான பூமியாகும் கலியுகமும்
நல்லோர்கள் ஆளுமை உண்டாகி

10. ஆகியே ஞானிகள் ஆட்சி
அரங்கமகான் தலைமை கொண்டு
அகிலமெங்கிலும் மாற்றமதும்
ஆற்றல் பட வந்தடையும்

11. அடையவே தருமவேலி கொண்ட
அருளமுது தரும் பிரணவக்குடிலுக்கு
தடையற உலகோர் வர மாற்றம் கிட்டும்
தாமுரைத்த யோகபிரசன்ன ஆசி முற்றே

–சுபம்–